www.padippakam.com




# உதயத்தின் ஐந்தாண்டுத் தொகுப்பறிக்கை

செ.குணரத்தினம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# உதயத்தின் ஐந்தாண்டுத் தொகுப்பறிக்கை

**அன்பார்ந்த இலக்கிய நெஞ்சங்களே!**

**அன்பார்ந்த வாசகர் வட்ட உறுப்பினர்களே!**

கிழக்கிலங்கையில் முதல்முதலாகத் திட்டமிட்ட ஒரு வெளியீட்டு நிறுவனமாக 15 - 01 - 1988 ல் தோன்றிய உதயம் பிரசுராலயத்தினர் வெளியீட்டுத் துறையில் ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்துள்ளார்கள். 10-04-1993ம் திகதி மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெறும் உதயத்தின் 5 வது ஆண்டு நிறைவு விழாவிலே உதயத்தின் ஐந்தாண்டுத் தொகுப்பறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**உதயத்திற்கு முந்திய கதை:**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எழுத்தாளர்களுடைய ஆக்கங்களை நூலுருவில் வெளியிடுவது தொடர்பாக ஆராய்வதற்கென 07-03-1987 ம் திகதி 65, லேடி மனிங் டிறைவ் கட்டடத்தில் காலை 10.00 மணிக்கு கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்திற்கு பின்வருவோர் சமூகமளித்திருந்தார்கள்:

1) ஆ. தங்கத்துரை
2) பா. குமரகுருபரன்
3) ஏ. எஸ்.மனோகரதாஸ்
4) த. யுவராஜன்
5) க. தருமரெத்தினம்
6) கா. நடராசா
7) கு. ஸ்ரீராகவராஜன்
8) அ. சிவதாசன்
9) சா. இ. கமலநாதன்
10) எஸ். எதிர்மன்னசிங்கம்
11) செழியன் ஜே. பேரின்பநாயகம்

ஆலோசனைக் கூட்டத்தில் 'மட்டக்களப்பு நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்' எனும் பெயரில் கூட்டுறவு அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்த்து நூல்வெளியீட்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு பின்வருவோர் கழகத்தின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்:- அ. சிவதாசன்
உபதலைவர்:- எஸ். எதிர்மன்னசிங்கம்
செயலாளர்:- பா. குமரகுருபரன்
உப செயலாளர்:- கு. ஸ்ரீ ராகவராஜன்
பொருளாளர்:- ஏ. எஸ். மனோகரதாஸ்



படிப்பகம்

www.padippakam.com

செயற்குழு உறுப்பினர்கள்

இரா. நாகலிங்கம் த. யுவராஜன்
சா. இ. கமலநாதன் க. தர்மரெட்ணம்
கா. நடராசா மாஸ்டர் சிவலிங்கம்
செழியன் ஜே. பேரின்பநாயகம்

கழகம் தனது செயற்குழுக் கூட்டத்தினை இருமுறை கூட்டியும் போதிய அளவு ஆதரவு கிடைக்காததால் திட்டம் கைவிடப்பட்டது.

**உதயத்தின் கதை:**

15 - 08 - 1987ம் திகதி மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் திரு. செ. குணரத்தினத்தின் 'நெஞ்சில் ஒரு மலர்' கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா நடைபெற்றது. அந்த நூல் திரு. வ. அ. இராசரத்தினம் அவர்களினால் மூதூரில் அச்சிடப்பட்டு மட்டக்களப்பில் வெளியிடப்பட்டது. இவ் வெளியீட்டு விழாவில் உரையாற்றியவர்கள் நூல்களை வெளியிடுவதில் உள்ள கஷ்டங்களைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். எழுத்தாளர்கள் தமது படைப்புகளுக்கு நூலுருவம் கொடுப்பதற்காக நகைகளை விற்றதாகவும், காணிகளை ஈடுவைத்ததாகவும் கூட எடுத்துரைத்தார்கள். வெளியீட்டுத் துறைக்கு ஊக்கமளிக்க மட்டக்களப்பில் ஒருவரும் முன் வருகிறார்களில்லையே என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது. வெளியீட்டு விழாவில் கூறப்பட்ட கருத்துக்களின் தாக்கத்தின் விளைவாகவே உதயம் உதயமாகியது.

**உதயத்தின் திட்டம்:**

15 - 01 - 1988ல் ஆரம்பிக்கப்பட்ட உதயம் வருடந்தோறும் கிழக்கிலங்கை எழுத்தாளர்களின் மூன்று (03) நாவல்களை வெளியிடுவதெனவும், இதன் மூலம் கிழக்கிலங்கையில் இலைமறை காயாக உள்ள எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களை எழுத்துத் துறையில் ஊக்குவிப்பதெனவும், உதயம் வாசகர் வட்டம் ஒன்றினை அமைத்து இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இத் திட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தை நிறைவேற்றும் பொருட்டு பரீட்சார்த்த வெளியீடு ஒன்றினை வெளியிட்() வாசகர் வட்ட உறுப்பினர்களைச் சேர்க்கும் முயற்சியிலீடுபவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

உதயம் வாசகர் வட்டம்:

உதயம் வாசகர் வட்டத்தில் ரூபா 100/- செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்பவர்களுக்கு வருடந்தோறும் மூன்று (03) நாவல்களை இலவசமாக குறைந்தது ஐந்து (5) வருடங்களுக்கு கொடுப்போமென வாக்குறுதி அளித்திருந்தோம். ஐந்து வருட முடிவில் ரூபா 100/-திருப்பிக் கொடுக்கப்படுமெனவும், தொடர்ந்தும் வெளியீடுகள் இலவசமாக வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தோம். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆகக் குறைந்தது 1000 உறுப்பினர்களையாவது சேர்க்க வேண்டியிருந்தது. ஆனால் எமது திட்டத்திற்கு வாசகர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கவில்லை; எனினும் எமது திட்டத்தைக் கைவிடாமல் வருடந்தோறும் இரண்டு (02) நூல்கள் வீதம் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வெளியிட்டு வாசகர் வட்ட உறுப்பினர்களுக்கு இலவசமாகக் கொடுத்து வந்துள்ளோம்.

ஒவ்வொரு வருடமும் வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தோரின் விபரங்களைக் கீழே தருகின்றோம்.

| ஆண்டு | உறுப்பினர்கள் சேர்ந்தது | மொத்தம் |
|---|---|---|
| 1988/89 | 125 | 125 |
| 1989/90 | 150 | 275 |
| 1990/91 | 175 | 450 |
| 1991/92 | 150 | 600 |
| 1992/93 | 50 | 650 |

31 - 03 - 1993 வரை மொத்தம் 650 வாசகர் வட்ட உறுப்பினர்கள் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



படிப்பகம்

உதயம் வெளியீடுகள்:

சாதாரண வாசகர்களைக் கவரக்கூடிய வகையில் நாவல்களை வெளியிடும் திட்டம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 1000உறுப்பினர்கள் சேர்ந்த பின்னர் சிறுகதைத் தொகுப்பு, கவிதைத் தொகுப்பு, இலக்கியக் கட்டுரைகள் போன்ற நூல்களையும் வெளியிட எண்ணியுள்ளோம். கடந்த ஐந்து ஆண்டுகளிலும் பத்து (10) நூல்களை வெளியிட்டுள்ளோம். பத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் ஒரு இலக்கியக் கட்டுரைத் தொகுப்பையும், ஏனைய ஒன்பது நூல்களிலும் நாவல்களையே வெளியிட்டுள்ளோம். விபரம் வருமாறு:

உதயம்: 1 'தெய்வதரிசனம்' - நாவல்
எழுதியவர்: செ. குணரத்தினம்
பக்கங்கள்: 147 அச்சிட்ட பிரதிகள்: 750
வெளியீடு: தை 1988
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: மட்டக்களப்பு நூல் நிலையம்
நாள்: 23 - 01 - 1988
**யாழ் இலக்கிய வட்டத்தினரால் 1988ம் ஆண்டில் வெளிவந்த நாவல்களில் சிறந்ததெனப் பாராட்டுப் பெற்றது**

உதயம்: 2 மஞ்சு நீ மழை முகில் அல்ல (பாகம் 1) - நாவல்
எழுதியவர்: திமிலைத்துமிலன்
பக்கங்கள்: 165 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: வைகாசி 1988
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை
நாள்: 23 - 05 - 88

உதயம்: 3 சந்தன றோஜாக்கள் - நாவல்
எழுதியவர்: ரவிப்ரியா
பக்கங்கள்: 132 அச்சிட்ட பிரதிகள்: 800
வெளியீடு: மார்கழி 1988
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயம்
நாள்: 01 - 01 - 1989

www.padippakam.com

உதயம்: 4 ஒரு தந்தையின் கதை - நாவல்
எழுதியவர்: அன்புமணி
பக்கங்கள்: 148 அச்சிட்ட பிரதிகள்: 800
வெளியீடு: வைகாசி 1989
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: சார்ள்ஸ் மண்டபம், மட்டக்களப்பு.
நாள்: 09 - 07 - 1989

**யாழ் இலக்கிய வட்டத்தினரால் 1989ம் ஆண்டு வெளிவந்த நாவல்களில் சிறந்ததென பாராட்டுப் பெற்றது.**

உதயம்: 5 உள்ளத்தின் உள்ளே -நாவல்
எழுதியவர்: ந. பாலேஸ்வரி
பக்கங்கள்: 108 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: சித்திரை 1990
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: உதயம் அலுவலகம்
நாள்: 05 - 05 - 1990

உதயம்: 6 புதிய பாதை - குறு நாவல்
எழுதியவர்: சுமதி அற்புதராஜா
சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்
எழுதியவர்: செ. குணரெத்தினம்(குறுநாவல்)
பக்கம்: 118 அச்சிட்ட பிரதி: 1000
வெளியீடு: ஐப்பசி, 1990
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: உதயம் அலுவலகம்
நாள்: 10 - 11 - 1990

உதயம்: 7 பாதை மாறுகிறது (குறு நாவல்)
பொன் குஞ்சுகள் (குறு நாவல்)
எழுதியவர்: திமிலை மகாலிங்கம்
பக்கங்கள்: 120 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: ஜூலை 1991
வெளியீட்டு: விழா நடைபெற்ற
இடம்: மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை
நாள்: 24 - 09 - 1991


படிப்பகம்

www.padippakam.com

உதயம்: 8 நான் நீதியின் பக்கம் - நாவல்
எழுதியவர்: க. அருள்சுப்பிரமணியம்
பக்கங்கள்: 156 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: நவம்பர் 1991
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்; திருகோணமலை.
நாள்: 01 - 12 - 1991

உதயம்: 9 பாதை மாறிய பயணங்கள் - நாவல்
எழுதியவர்: மண்டூர் அசோகா
பக்கங்கள்: 154 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: ஆகஸ்ட் 1992
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: உதயம் அலுவலகம்
நாள்: 05 - 10 - 1992

உதயம்: 10 இலக்கியச் சிமிழ் - கட்டுரைகள்
(இரண்டாம் பதிப்பு)
எழுதியவர்: அகளங்கன்
பக்கங்கள்: 104 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: மாசி 1993
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: உதயம் அலுவலகம்
நாள்: 10 - 02 - 1993

உதயம்: 11 ஒரு வெண்மணற் கிராமம்
காத்துக்கொண்டிருக்கிறது. - நாவல்
எழுதியவர்: வ. இ. இராசரத்தினம்
பக்கங்கள்: 122 அச்சிட்ட பிரதிகள்: 1000
வெளியீடு: மார்ச் 1993
வெளியீட்டு விழா நடைபெற்ற
இடம்: சார்ள்ஸ் மண்டபம், மட்டக்களப்பு.
நாள்: 10 - 04 - 1993



படிப்பகம்

www.padippakam.com

உதயம் பல இலவச வெளியீடுகளையும் காலத்திற்குக் காலம் வெளியிட்டு வந்துள்ளது. விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1) | திருமுறைப் பாடல்கள் | — 600 |
| 2) | சிவ சிவ சிவ | — 500 |
| 3) | மாமாங்கேஸ்வரர் கீர்த்தனைகள் | — 750 |
| 4) | பிள்ளையார் கதை(இரண்டு பதிப்புகள்) | — 1500 |
| 5) | மாமாங்கேஸ்வரர் மகத்துவம் | — 1000 |
| 6) | கந்தசஷ்டி கவசம் (மூன்று பதிப்புகள்) | — 4000 |
| 7) | விநாயகர் அகவல் | — 1000 |
| 8) | மரணச் சடங்குப் பாடல்கள் | — 600 |
| 9) | திருவெம்பாவை | — 500 |
| 10) | மகாசிவராத்திரி | — 500 |
| 11) | நித்தியகருமவிதி | — 500 |
| 12) | நவராத்திரி | — 500 |

**உதயம் ஆலோசனைக் குழு:**

உதயம் வெளியிடும் நூல்கள் தரமானவைகளாக இருக்க வேண்டுமென்ற உயர் நோக்குடன் 1989 ம் ஆண்டில் ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்தோம். இக்குழுவில் பின்வருவோர் உறுப்பினர்களாக இருந்து நூல்களைப் படித்து பிரசுரத்திற்கான தகுதியை நிர்ணயித்து வந்தார்கள்.

திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி)

திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா (சட்டத்தரணி)

திரு. க. ரவீந்திரன் (ரவிப்ரியா)

திரு. அ. சிவதாசன் (படவரைஞர்)

திரு. எஸ். என். இராமநாதன் (மட்டூர் ராம்)

1-4-1993 ம் திகதி தொடக்கம் புதிய ஆலோசனைக் குழுவொன்றினை நியமித்துள்ளோம். பின்வருவோர் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

திரு. சி. மௌனகுரு - கிழக்குப் பல்கலைக்கழகம்
திரு. வீ. ஆனந்தன் - தபாலகம், சம்மாந்துறை
திரு. வெ. தவராசா - ஆசிரியர் வி. ம. உ. கல்லூரி
திரு. கே. ஆறுமுகம் - மக்கள் வங்கி, மட்டக்களப்பு
திருமதி. அ.யோகராசா (மண்டூர் அசோகா) - ஆசிரியை

உதயத்தின் விசேட வெளியீடுகள்.

உதயத்தின் விசேட வெளியீடுகளாகப் பின்வருவன வற்றை வெளியிட்டுள்ளோம். இவை வாசகர் வட்ட உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்படவில்லை.

அ) 'பயங்கர இரவு' மணிவிழாக்காணும் மாஸ்டர் சிவலிங்கத்தின் சிறுவர் கதைத் தொகுப்பு.
வெளியீடு: மார்ச் 1993

ஆ) 'ஒரு வானவில் றோஜாவாகிறது' ரவிப்ரியா எழுதியது (இரண்டாம் பதிப்பு)
வெளியீடு: ஏப்ரல் 1993

பிற வெளியீடுகள்:

உதயத்தின் ஆதரவுடன் பல எழுத்தாளர்கள் தமது படைப்புக்களுக்கு நூலுருவம் கொடுத்துள்ளார்கள். இவர்களுக்கு பல வகையிலும் ஊக்கமளித்து நூல்கள் சிறந்த வடிவமைப்பில் வெளிவர உதவியுள்ளோம். எமது ஆதரவில் வெளிவந்த நூல்கள் வருமாறு:

i) எட்டாவது நரகம் (கவிதைகள்)
எழுதியவர்: சோலைக்கிளி
பக்கங்கள்: 62 அச்சிட்ட பிரதிகள்: 500
வியூகம் வெளியீடு: 1 - 3 - 1988
யாழ் இலக்கிய வட்டம் முதற் பரிசு வழங்கியது
வட-கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. (1990)

ii) சந்ததிச் சுவடுகள் - (நாடகங்கள்)
எழுதியவர்: சு. ஸ்ரீஸ்கந்தராசா
பக்கங்கள்: 120 அச்சிட்ட பிரதிகள்; 1000
வெளியீடு: ம.தெ.எ. பற்று பிரதேச கலாசாரப் பேரவை, வெளியீடு: ஜுலை 1988



படிப்பகம்

www.padippakam.com

iii) பயணம் தொடர்கிறது - (நாவல்)

எழுதியவர்: நாவண்ணன்

பக்கங்கள்: 170 அச்சிட்ட பிரதிகள்: 1000

தொண்டன் வெளியீடு: நவம்பர் 1988

iv) ஒரு வானவில் றோஜாவாகிறது

(முதலாம் பதிப்பு) நாவல்

எழுதியவர்: ரவிப்ரியா

பக்கங்கள்: 191 அச்சிட்ட பிரதிகள்: 1000

மட்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க

வெளியீடு: பெப்ரவரி 1989

v) பராசக்தி பாமாலை (பாடல்கள்)

எழுதியவர்: மு. கணபதிப்பிள்ளை

பக்கங்கள்: 42 அச்சிட்ட பிரதிகள்: 1000

கோட்டைக் கல்லாறு சதுராலயம்

வெளியீடு: மார்ச் 1989

vi) விபுலாநந்தர் வாழ்கின்றார் (கவிதைகள்)

எழுதியவர்: ஆரையூர் இளவல்

பக்கங்கள்: 24 அச்சிட்ட பிரதிகள்: 500

ஆரையம்பதி ஸ்ரீ முருகன் இந்து மன்ற

வெளியீடு: செப்டெம்பர் 1991

vii) நிர்வாணம் (சிறுகதைகள்)

எழுதியவர்: உடுவை தில்லைநடராசா

பக்கங்கள்: 100 அச்சிட்ட பிரதிகள்: 2000

திருகோணமலை தாகம் கலை இலக்கிய வட்ட

வெளியீடு: ஒக்டோபர் 1991

தமிழ்நாடு - கோயம்புத்தூர் லில்லி தேவசிகா மணி நினைவு இலக்கியப் பரிசுத் திட்டத்தின் கீழ் 1992 ம் ஆண்டு 1ம் பரிசு பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

viii) மஞ்சு நீ - இரண்டாம் பாகம் (நாவல்)

எழுதியவர்: திமிலைத்துமிலன்
பக்கங்கள்: 100 அச்சிட்ட பிரதிகள்: 1000
மட்/ஆசிரியர் கலாசாலை கவிமணி
வெளியீட்டுக் குழு வெளியீடு: நவம்பர் 1991

ix) புள்ளிப் புள்ளி மானே (சிறுவர் இலக்கியம்)
பக்கங்கள்: 38 அச்சிட்ட பிரதிகள்: 1000
மட்/தேனமுத இலக்கிய மன்ற
வெளியீடு: டிசம்பர் 1991

வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு (1991) பெற்றது.

x) அன்றில் பறவைகள் (நாடகங்கள்)
எழுதியவர்: அகளங்கன்
பக்கங்கள்: 85 அச்சிட்ட பிரதிகள்: 1000
வவுனியா முத்தமிழ் கலா மன்ற
வெளியீடு: மார்ச் 1992

xi) முத்தொள்ளாயிரம் (நாடகம்)
எழுதியவர்: திமிலைத்துமிலன்
பக்கங்கள்; 96 அச்சுப் பிரதிகள்; 1000
மட்/ ஆசிரியர் கலாசாலை கவிமணி
வெளியீட்டுக் குழு வெளியீடு: நவம்பர் 1992

xii) சிறுவருக்கு விபுலாநந்தர்
எழுதியவர்: திமிலை மகாலிங்கம்
பக்கங்கள்: 56 அச்சிட்ட பிரதிகள்: 1000
மட்/ தேனமுத இலக்கிய மன்ற வெளியீடு
டிசம்பர் 1992



படிப்பகம்

www.padippakam.com

xiii) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள்)
(முதலாம் பதிப்பு)

எழுதியவர்: அகளங்கன்

பக்கங்கள்: 126 அச்சிட்ட பிரதிகள் 1000
வவுனியா முத்தமிழ்க் கலாமன்ற வெளியீடு
டிசம்பர் 1992

xiv) வினைதீர்க்கும் விநாயகர் (இந்து சமய மூர்த்தி விளக்கம்)

எழுதியவர்: கந்தவனம் தங்கவேலாயுதம்

பக்கங்கள்: 160 அச்சிட்ட பிரதிகள்: 500

வெளியீடு: டிசம்பர் 1992

**உதயத்தின் ஆதரவில் வெளியீட்டு விழாக்கள்**

அ) உடுவை எஸ். தில்லைநடராசா அவர்கள் எழுதிய 'நிர்வாணம்' (சிறுகதைகள்) நூல் அறிமுக விழாவை மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் 21-12-1991ல் பெருவிழாவாக நடாத்தினோம்.

ஆ) கவிஞர் ஞானமணியத்தின் தவத்திரு விபுலாநந்த அடிகளாரின் 100ற்றாண்டுப் பாமலர் நூலினை 10-04-1993 (இன்று) மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் வெளியிடுகின்றோம். லண்டன் - பிரித்தானியா பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கத்தினர் பெரும் செலவில் 2000 பிரதிகளை வெளியிட்டு கிழக்கிலங்கை மக்களுக்கு இலவசமாக வழங்கும்படி பணித்துள்ளார்கள்.

**நூல்கள் அன்பளிப்பு:**

உதயத்தின் 5வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அறுபத்தைந்து (65) நூலகங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூபா 300/- பெறுமதி வாய்ந்த நூல்களை (மொத்தப் பெறுமதி ரூபா 20,000/-) இன்று அன்பளிப்புச் செய்யவிருக்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

அன்பளிப்பு நூல்களைப் பெறவிருக்கும் நூலகங்களின் விபரம் வருமாறு;

1) மட்/ வின்சன்ற் மகளிர் உ. பாடசாலை
2) '' புனித மிக்கேல் கல்லூரி
3) '' புனித சிசிலியா ம. வித்தியாலயம்
4) '' மெதடிஸ்த ம. கல்லூரி
5) '' ஆனைப்பந்தி இ. கி. மி. பாடசாலை
6) '' இந்துக் கல்லூரி
7) '' அரசினர் ஆசிரியர் கலாசாலை
8) '' மகாஜனக் கல்லூரி
9) '' கல்லடி விபுலாநந்த வித்தியாலயம்
10) ''சிவானந்த வித்தியாலயம்
11) ''விவேகானந்தா மகளிர் வித்தியாலயம்
12) '' விபுலாநந்த இசை நடனக் கல்லூரி
13) '' அமிர்தகளி மகா வித்தியாலயம்
14) '' விக்னேஸ்வரா வித்தியாலயம், புதூர்.
15) '' விபுலாநந்தா வித்தியாலயம், கருவேப்பங்கேணி
16) '' வாழைச்சேனை இந்துக் கல்லூரி
17) '' இராமகிருஷ்ண வித்தியாலயம், சித்தாண்டி.
18) '' சித்தாண்டி மகா வித்தியாலயம்
19) '' செங்கலடி மகா வித்தியாலயம்
20) '' ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம்
21) '' சாஹிரா மகா வித்தியாலயம், காத்தான்குடி.
22) '' காத்தான்குடி மகா வித்தியாலயம்
23) '' இராமகிருஷ்ண வித்தியாலயம், ஆரையம்பதி.
24) '' ஆரையம்பதி மகா வித்தியாலயம்



படிப்பகம்

www.padippakam.com

25) மட்./இராமகிருஷ்ண வித்தியாலயம், மண்டூர்
26) '' மண்டூர் மகா வித்தியாலயம்
27) கிழக்கிலங்கை பல்கலைக் கழகம்
28) முகாமையாளர், வாழைச்சேனை கடதாசி ஆலை
29) பிரதேச சபை நூலகம் வாழைச்சேனை
30) ,, ,, ஓட்டமாவடி
31) ,, ,, வந்தாறுமூலை
32) ,, ,, ஏறாவூர்
33) ,, ,, மட்டக்களப்பு
34) ,, ,, ஈச்சந்தீவு
35) ,, ,, காத்தான்குடி
36) ,, ,, ஆரையம்பதி
37) ,, ,, குடியிருப்பு
38) ,, ,, கொக்கட்டிச்சோலை
39) ,, ,, களுவாஞ்சிகுடி
40) ,, ,, களுதாவளை
41) ,, ,, கல்லாறு
42) ,, ,, துறைநீலாவணை
43) ,, ,, பழுகாமம்
44) ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம், பெரியகல்லாறு
45) குருக்கள்மடம் சனசமூக நிலையம்
46) தெய்வநெறிக் கழகமும், சனசமூக நிலையமும் கோட்டைக்கல்லாறு
47) ஸ்ரீகண்ணகி சனசமூக நிலையம், தாளங்குடா
48) சிவா சனசமூக நிலையம் செல்வாநகர், ஆரையம்பதி
49) பரிதி சனசமூக நிலையம், ஆரையம்பதி - 3



படிப்பகம்

www.padippakam.com

50) இக்பால் சனசமூக நிலையம் காத்தான்குடி - 5

51) ஹிஸ்புல்லாஹ் சனசமூக நிலையம்,மஞ்சந்தொடுவாய்

52) மட்டிக்கழி சனசமூக நிலையம்

53) அமிர்தகழி சனசமூக நிலையம்

54) வித்துவான் சரவணமுத்து சனசமூக நிலையம், கறுவாக்கேணி

55) கிரான்குளம் கிராமோதயசபை

56) மங்கையர்க்கரசியார் இல்லம், மட்டக்களப்பு

57) திருஞானசம்பந்தர் குருகுலம், களுதாவளை

58) மாணிக்கவாசகர் இல்லம், சந்திவெளி

59) தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மட்டக்களப்பு

60) மட் / முதலைக்குடா ஸ்ரீகோபால் மகாவித்தியாலயம்

61) '' நில அளவைத் திணைக்கள நூலகம்

62) '' இலங்கை வங்கி நூலகம்

63) '' இறைவரித் திணைக்கள நூலகம்

64) ''கூட்டுறவு ஆணையாளர் திணைக்கள நூலகம்

65) '' மக்கள் வங்கி பிராந்திய அலுவலக நூலகம்

**உதயத்தின் அட்டைப் படங்கள்:**

மட்டக்களப்பைச் சேர்ந்த கிராம சேவை அலுவலர் திரு. க. சரவணபவான் (பவான்), டாக்டர் எஸ். வேலாயுதம்பிள்ளை ஆகிய இருவரும் உதயத்தின் பதினொரு வெளியீடுகளுக்கும், உதயத்தின் ஆதரவில் வெளியிடப் பட்ட பதினான்கு வெளியீடுகளுக்கும் அட்டைப் படங்களை வரைந்துள்ளார்கள். இவர்களின் திறமையைப் பலர் பாராட்டியுள்ளார்கள். இவர்களுடைய ஓவியத்திறமையை ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு அறிமுகம் செய்த பெருமை உதயத்தையே சாரும்.



படிப்பகம்

www.padippakam.com

**வட-கிழக்கு மாகாண கல்வி, கலாசார அமைச்சின் ஊக்குவிப்பு:**

கடந்த சில வருடங்களாக நூல் வெளியீட்டுத் துறையில் திடீர் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமைக்கு முக்கிய காரணம் வட-கிழக்கு மாகாண கல்வி, கலாசார அமைச்சின் ஊக்குவிப்பேயாகும். எழுத்தாளர்களின் நூல்களை அமைச்சு கணிசமான அளவு கொள்வனவு செய்து நூலகங்களுக்கு வழங்கும் பணி பாராட்டுதற்குரியது. உதயத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்த அமைச்சையும் குறிப்பாக கலாசார உதவிப் பணிப்பாளர் திரு எஸ்.எதிர்மன்னசிங்கம் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

**அன்பான வேண்டுகோள்:**

எழுத்தாளர்களே! எமது இலக்கியப்பணி தொடர கிழக்கிலங்கையில் இலைமறை காயாக உள்ள உங்களுடைய படைப்புக்களை(நாவல்களை)எழுதி அனுப்புங்கள். தரமான நாவல்கள் பிரசுரிக்கப்படுவதுடன் சன்மானமாக ரூபா 500/- இலவசப் பிரதிகள் ஐந்தும்(05)அல்லது சன்மானத் தொகைக்குச் சமமான பிரதிகள் அன்பளிப்பாக வழங்கப்படும்.

வாசகர்களே! வாசகர் வட்ட உறுப்பினர் தொகை இன்று 650ஐ அடைந்துள்ளது. உறுப்பினர் தொகை 1000 ஆகியதும் மூன்று வெளியீடுகளை வருடந்தோறும் நாம் வெளியிடுவோம். அப்படி வெளியிடும் பொழுது மூன்றாவது நூல் கட்டாயமாக கவிதை, சிறுகதை அல்லது கட்டுரைத் தொகுப்பாகவே வெளிவரும். ஆதலால், வாசகர்கள் தாமாக முன்வந்து உறுப்பினர்களாகச் சேர்ந்துகொள்ள வேண்டுமென அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உறுப்பினர்களே! நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு எங்கள் திட்டம் பற்றி எடுத்துக்கூறி ஒவ்வொரு புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொடுத்து எமது ஆசையை நிறைவேற்றுவதுடன் நீங்களும் 1994 ம் ஆண்டு தொடக்கம் மூன்று(03)நூல்களை இலவசமாகப் பெற்று கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# நன்றி கூறுகின்றோம்:

- உதயம் வாசகர் வட்ட உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள 650 உறுப்பினர்களுக்கும்,
- உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுத்து உதவிய அனைவருக்கும் குறிப்பாக 50 க்கு மேற்பட்ட உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுத்த திருவாளர்கள் இரா. நாகலிங்கம் (அன்புமணி) கே. ரவீந்திரன் (ரவிப்பிரியா) வீ முருகமூர்த்தி (சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்)பி. மதிபாலசிங்கம் (மட் / ஆசிரியர் கலாசாலை) ஆகியோருக்கும்,
- உதயத்தை அலங்கரித்த எழுத்தாளர்கள் அனைவருக்கும்,
- அட்டைப் படங்களை வரைந்து கொடுத்த ஓவியர்கள் க. சரவண பவான், டாக்டர். எஸ். வேலாயுதம்பிள்ளை ஆகியோருக்கும்,
- ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும்,
- வெளியீட்டு விழாக்களில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களுக்கும், ஆசியுரை, ஆய்வுரை, நயவுரை வழங்கியவர்களுக்கும்,
- நூல்களைக் கொள்வனவு செய்து உதவிவரும் இந்து சமய கலாசார அமைச்சுக்கும், வட - கிழக்கு மாகாண கல்வி, கலாசார அமைச்சுக்கும்,
- வெளியீடுகளை சிரமம் பாராது வெளியிடங்களிலும், திணைக் களங்களிலும் விநியோகித்து உதவி புரியும் திருவாளர்கள் D. யுவராஜன், S. ஸ்ரனிஸ்லோஸ், கே. ரவீந்திரன், கே. யோகராசா, திருமதி. தங்கவேல் (சக்தி) அவர்களுக்கும்,
- உதயத்தின் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை உறுப்பினர்கள் பலரைச் சேர்த்துக் கொடுத்தும், நூல்களை உறுப்பினர்களுக்கு விநியோகித்தும், ஆலோசனைச் சபை உறுப்பினராகவும், தன்னலம் கருதாது உதயத்தின் வளர்ச்சியில் இன்றுவரை பங்கெடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்மணி இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்களுக்கும்,
- ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா அமைப்புக்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் காசுபதி நடராசா, திமிலை மகாலிங்கம் ஆகியோருக்கும்,
- உதயத்திற்கு உருவம் கொடுத்து அழகாக அச்சிட்டு உதவிவரும் புனித செபத்தியார் அச்சக ஊழியர்களுக்கும்,
- எமக்கு பல வகையிலும் உதவிகளைப் புரிந்த - இங்கு குறிப்பிடத் தவறிய அனைவருக்கும்,

எமது மனமார்ந்த நன்றிகள்.

உஷா சிவதாசன்
உதயம் பிரசுராலயம் அதிபர்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

புனித செபத்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

படிப்பகம்